திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த சீரணிப் படைக்கு 1972-73லே ரூ. 12 இலட்சம் செலவழிக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1973-74 லே இது தானாகவே இயங்கும் படையாக இருக்கிற காரணத்தால், செலவு குறைந்திருக்கிறதா ? அப்படி என்றால், எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : செலவு ஒன்றும் குறையவில்லை. மேற்கொண்டு, இன்னும் செலவிடத் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அவைகளை விரைவில் ஆராய்ந்து நிறைவேற்றலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சீரணிப் படைக்குச் செலவிடப்படுகிற பணத்திற்கும், அவர்களால் செய்யப்படுகிற பணிகளுக்கும் மதிப்பீடுகள் போடப்பட்டிருக்கிறதா ? தனியாருக்கு அளித்தால் ஆகும் பணிகளைவிட, அதிகப் பணிகள் இவர்களால் ஆகியிருப்பதாகக் கணக்கியப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சீரணிப் படையின் மூலமாகச் செலவழிக்கிற பணத்திற்கும், தனியார் காண்ட்ராக்டின் மூலம் செய்கின்ற பணிக்கும் வித்தியாசம் இல்லை என்று சொல்லுகிறார்களே, அது சம்பந்தமாக அரசு ஏதாவது பரிசீலனை செய்து முடிவு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்பொழுது தகவல் இல்லை. கனம் உறுப்பினர் தெரிவித்த கருத்தை நினைவில் வைத்து அதுபற்றி ஆவன செய்ய முயற்சிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சீரணிப்படையிலே இருக்கிற பெண்கள் என்ன பணிகள் செய்கிறார்கள் என்பவை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சீரணியினுடைய கருத்தை நிறைவேற்றும் வகையில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். குறிப்பாக, பள்ளிக்கூடங்களை அமைப்பது, துப்புரவுப் பணிகளைச் செய்வது போன்ற பணிகளில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

## அரிசனங்களுக்கு சிறு தொழில் நடத்தக் கடன்கள்.

*276 வினா : திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972-73-ம் ஆண்டில் சிறு கைத்தொழில் செய்ய அரிசன மக்களுக்கு கொடுத்த கடன் தொகை, அதைப் பெற்றவரின் விவரங்கள் யாவை ?

(இ) அவர்களிடமிருந்து கடன் தொகை வசூலிக்கப்பட்டு வருகிறதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :

(அ) வழங்கப்பட்ட தொகை ரூ. 10,09,025. கடன் பெற்றவரின் எண்ணிக்கை 1,633.

(இ) இல்லை. மனுதாரர்களுக்கு கடன் பட்டுவாடா செய்த தேதியிலிருந்து 12 மாதங்களுக்குப் பிறகுதான் மனுதாரர்களிடமிருந்து கடனை அந்தந்த மாவட்ட நல அதிகாரிகள் வசூலிக்கத் தொடங்குவர்.

(உ) இந்த வினவுக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், கடன் கோரி வருகின்ற விண்ணப்பங்களிலே எவ்வளவு சத வீதம் விண்ணப்பங்களுக்குக் கடன் அளிக்கப்படுகிறது, எவ்வளவு பேருக்குக் கடன் அளிக்க முடியாத நிலைமை இருக்கிறது என்று அறியலாமா ?

இன்னொன்று, கடனுக்குச் சில பாங்குகளிலே சிபார்சு செய்யப்பட்டு, அவர்கள் அங்கே கடன் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி பாங்குகளுக்குச் சென்றால், இவர்களிடத்தில் வசூலிக்க முடியாது என்றும் வேறு பல காரணங்களையும் கூறி, கடன் அளிக்கப்படுவதில்லை. இதனால், கடன் பெறலாம் என்று நம்புகின்ற அரிசனங்கள் பெரும் ஏமாற்றத்தை அடைந்து விடுகிறார்கள். இதற்கு ஏதாவது வழிமுறை செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது, சர்க்காரால், குறிப்பாக, நலத் துறையினரால் அளிக்கப்படுகிற திட்டமாகும். இதற்கும் பாங்குக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இதற்கு ஏராளமான மனுக்கள் வருகின்றன. ஆண்டிற்கு ரூ. 10 இலட்சம் என்று கடந்த 2 ஆண்டுகளாக ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். மனுக்கள் வருகின்ற சதவீதத்தைத் தற்பொழுது என்னால் தர இயலவில்லை. பாங்குகளின் மூலமாக தற்பொழுது கடன் தருகிறார்கள். அது அரசின் மூலமாக அல்ல ; அவர்களாகவே சென்று அந்தக் கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த நல இலாகாவிலிருந்து என்ன என்ன தொழிலுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. அதில், ஏதாவது, உச்ச வரம்பு வைத்திருக்கிறதா? அப்படி என்றால், அது பற்றிய விவரங்களை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ரூ. 250-லிருந்து, ரூ. 10,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. வெற்றிலைப் பாக்கு, பழக் கடைகளிலிருந்து அச்சுக்கூடம், டிங்கரிங் ஒர்க்ஸ், லேத் பட்டறை, மெடிகல் ஸ்டோர் வரையிலும் வைக்க ரூ. 250-லிருந்து ரூ. 10,000 வரையிலும் வழங்கப்படுகிறது.

*1974 மார்ச் 4]*

டாக்டர் ச. மு. பழனியப்பன் : அப்படி அரிசன மக்களுக்குக் கொடுக்கப் படுகிற கடன் தொகை மாவட்ட வாரியாக எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் முடிய கடன் இருக்கிறது. நான் மொத்தமாகத் தருகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ரூ. 11,463. கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆனால், இதுவரைக்கும் வசூலாகியிருப்பது ரூ. 10.

| | ரூ. |
|---|---|
| வட ஆற்காடு | 76,184 |
| தென் ஆற்காடு | 20,160 |
| திருச்சிராப்பள்ளி | 1,205 |
| மதுரை | 4,383 |
| இராமநாதபுரம் | 5,926 |
| திருநெல்வேலி | 16,857 |
| கன்னியாகுமரி | 1,007 |
| நீலகிரி | 636 |
| சேலம் | 2,021 |
| தர்மபுரி | 3,419 |
| கோவை | 15,930 |

இது 1972-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி முடிய. 1972–73-க்கு இன்னும் சற்று அதிகமான தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | ரூ. |
|---|---|
| சென்னையில் வழங்கப்பட்ட தொகை | 3,95,425 |
| செங்கற்பட்டு | 1,05,450 |
| வடாற்காடு | 56,650 |
| தென்னுற்காடு | 36,725 |
| தஞ்சாவூர் | 8,500 |
| திருச்சிராப்பள்ளி | 18,250 |
| மதுரை | 1,10,775 |
| இராமநாதபுரம் | 80,750 |
| சேலம் | 36,600 |
| தர்மபுரி | 50,325 |
| கோயம்புத்தூர் | 32,200 |
| திருநெல்வேலி | 63,625 |
| கன்னியாகுமரி | 11,125 |
| நீலகிரி | 2,625 |

ஆக, மொத்தம் ரூ. 10,09,025.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டமாக இருப்பதால் தொகையை உயர்த்துவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முயற்சி செய்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன்கள் மூலமாக நடத்தப்படுகின்ற தொழில்கள் லாபகரமாக நடத்தப்படுகின்றனவா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பெரும்பாலானவர்கள் லாபகரமாக நடத்திப் பயன் பெறுகிறார்கள். சிலர் அப்படி லாபகரமாக நடத்திப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதும் உண்மைதான்.

திரு. ந. சோமசுந்தரம் : 1971–72-லே தஞ்சை மாவட்டத்திலே அரிசனங்களுக்குக் கடன் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விவரம் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத் துறையின் மூலமாகக் கடன் வழங்கப்படுவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. கடன்கள் கேட்டு விண்ணப்பங்கள் போட்டு பல வருஷங்கள் ஆகியும் கூட அவர்களுக்கு எல்லாம் இன்னும் கடன்கள் கிடைக்கவில்லை. ஆகவே கடன்களை எல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவோ அல்லது யூனியன்களுக்கு உட்பட்ட பஞ்சாயத்துக்கள் மூலமாகவோ கொடுப்பதற்கான திட்டம் கொண்டுவர அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்பொழுது கொடுக்கப்படுகிற முறையில் தாமதம் தான் ஏற்படுகிறது. தவறுகள் ஏற்படுவதில்லை. ஆனால் பஞ்சாயத்துக்கள் மூலமாகக் கொடுத்தால் தவறுதல் ஏற்படலாம் என்று அரசு அஞ்சுகிறது.

திரு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் வரி விதிப்புக் கொள்கையின் காரணமாகத்தான் பொருள்களின் விலையேறிவிட்டது. ஆயிரம் ரூபாய்க்கு வாங்கக் கூடிய டைப்ரைட்டர்கள் எல்லாம் இரண்டாயிரம் ரூபாய் என்று விலையேறிவிட்டது. ஆகவே விலையேற்றத்தை உத்தேசித்து அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கடன் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அச்சுத் தொழில்கள் போன்ற தொழில்களை ஆரம்பிப்பதற்குக் கொடுக்கப்படுகிற 5,000 ரூபாய் கடனை 10,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். விலைவாசியேற்றத்தையொட்டி இவையெல்லாம் ஏற்றப்படலாம்.

1974 மார்ச் 4]

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் கடன்கள் வழங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி ஒதுக்குகின்றபொழுது அந்தந்த மாவட்டத்திலே உள்ள மக்களின் எண்ணிக்கையை வைத்து ஒதுக்கப்படுகிறதா அல்லது ஒரு தோராயமாக ஒதுக்கப்படுகிறதா ? அரிசன நலத் துறையினர் சிபார்சுகள் செய்வதையொட்டிதான் பாங்குகள் கடன் கொடுக்கிறுர்கள், நேராகப் பாங்குகள் கடன் கொடுப்பதில்லே. ஆனுல், அரிசன நலத் துறையினர் சிபார்சுகள் செய்தும்கூட பாங்குகள் கொடுப்பதில்லே. ஆகவே, அவர்கள் சிபார்சு செய்தால் அவர்களுக்கு எல்லாம் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் ஏற்கனவே சொன்னேன், பாங்கிற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லேயென்று. இது நலத் துறையின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. கேட்கிற அத்தனை பேர்களுக்கும் வழங்குவது என்பது உசிதமாக இருக்க முடியாது. கேட்பவர்கள் உண்மையிலேயே தொழில் செய்யக் கூடியவர்களா என்றும் திருப்பித் தரக் கூடியவர்களா என்றும் நலத் துறை பார்த்து கொடுக்கிறது. ஆகவே, பாங்கிற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லே.

திரு. அ. ஆறுமுகம் : தலேவர் அவர்களே, அரிசனங்கள் பண்ணேகள் வைப்பதற்கும், மாடு வாங்குவதற்கும் கடன் கொடுக்கப்பட்டது, ஆனுல், இப்பொழுது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, அதை மீண்டும் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படி நிறுத்தி வைக்கப் பட்டு இருப்பதாக எனக்குத் தகவல் இல்லே. அப்படியிருந்தால் அது பற்றி பரிசீலனே செய்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : குறிப்பாக, சென்னேயிலே பல அரிசனப் பெண்கள் தையல் மெஷின்களுக்காகக் கடன்கள் கேட்டு இருக்கிறுர்கள். காய்கறிக் கடை வைக்க வேண்டுமென்று கடன் கேட்டால், சீக்கிரமாக, 400, 500 ரூபாய் கொடுத்துவிடுகிறுர்கள். ஆனுல், தையல் மெஷின்கள் வாங்குவதற்காகக் கேட்டால், அவர்களுக்குக் கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. ஆகவே, ஒரு காலவரையறை வைத்து இரண்டு மாதம் என்று வைத்து அதற்குள்ளாக புராஸஸ் செய்து முடித்து அவர்களுக்குக் கடன் கொடுக்கப் போகிறுர்களா இல்லேயா என்பதைத் தெரிவிக்கக் கூடிய முறையைக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : காய்கறிக் கடை என்ருல் எந்தப் பெண் வேண்டுமானுலும் வைக்கலாம். ஆனுல், தையல் கடை வைக்க வேண்டுமென்ருல், பயிற்சி பெற்றவர்கள்தான் வைக்க முடியும். ஆகவே, கடன் கேட்கிறவர்கள் தையல் கலேயில் பயிற்சி பெற்றிருக்கின்ற அத்தாட்சியைக் கொடுக்க வேண்டும். அதிலே சிறிது தாமதம் ஏற்படுகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that even amongst the Harijans there is the lowest class called 'cobblers' and many of their applications have been refused by the Harijan Welfare Department. So, may I know whether preference will be given to such poorest class of Harijans, cobblers ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் அப்படிப் பிரித்து பாகுபாடு செய்வது கிடையாது. எல்லாப் பிரிவினர்களுக்கும் தொழில் தெரிந்திருந்தால் அவர்களுக்கு எல்லாம் கடன்கள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறு கின்ற அவர்களுக்கும் நலத்துறையின் மூலமாகக் கடன்கள் வழங்கப் படுகின்றன.

திரு எஸ். வடிவேல் : அச்சுக்கூடங்கள் வைப்பதற்கும், மருந்துக் கடைகள் வைப்பதற்கும் என்று ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதுபற்றி எனக்குத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. இராசாமணிக்கம் : அரிசனங்களுக்குக் கடன்கள் வழங்கப்படும் பொழுது, காய்கறிக் கடை, டீக்கடை வைப்பதற்குக் கடன் கேட்டால் அவர் கள் காய்கறிக் கடை வைத்திருக்கிறார்களா, டீக்கடை வைத்திருக்கிறார்களா வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருக்கிறார்களா என்று பார்க்கிறார்கள். அப்படியில்லையென்றால் மறுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தொழில்கள் ஆரம்பிப்பதற்காகத்தான் கடன்கள் கேட்கப்படுகின்றன, ஆகவே, அவை யெல்லாம் இல்லாமலிருந்தாலும் கூட அவர்களுக்குக் கடன்கள் வழங்கச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கடன் கேட்கின்றபொழுது கடன் கொடுக்கப்பட்டு அவர்கள் நடத்துகிறார்களா இல்லையா என்று பார்க்கிறார்கள். பெரும்பாலானவர்கள் வாங்கித் தொழில் நடத்துவது கிடையாது.

திரு. எம். ஆர். கண்ணன் : இந்த லோன் அப்ளிகேஷனில் இன்ன கம்யூனிட்டி என்று போடுவதற்காக ஒரு இடம் விடப்பட்டிருக்கிறது, அதிலே எந்தக் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர் என்று ஃபில் அப் செய்த பிறகும் M.L.A. கையெழுத்தையும் வாங்கிக் கொடுத்த பிறகு மீண்டும் தனியாக கம்யூனிட்டி சர்டிபிகேட் வேண்டுமென்று அதிகாரிகள் மனு தார்களைக் கேட்கிறார்கள். இதனால், கடன் மனுதார்களுக்கு சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் எங்களிடம் மீண்டும் வந்து தனியாக சாதி சர்டிபிகேட் கேட்கிறார்கள். இது தேவையில்லாதது. ஆகவே, M.L.A.க் கள் லோன் அப்ளிகேஷனில் கையெழுத்திட்டவுடன் விசாரித்து லோன் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே உத்திரவை அதிகாரிகளுக்குப் போடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

1974 மார்ச் 4]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கம்யூனிட்டி சர்டிபிகேட் கேட்பது முறையானதுதான். அதைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அந்தக் குறிப்பிட்ட நமூனாவில், குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சட்ட மன்ற உறுப்பினர் அத்தாட்சி கொடுத்தால் ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கத்தினர் குறிப்பிடுவது போன்ற புகார்கள் எதுவும் எனக்கு வரவில்லை. அப்படி ஏதாவது புகார் இருக்கிறதா என்று விசாரிக்கிறேன்.

## திருச்சிராப்பள்ளி அரிசன மாணவ விடுதிகளுக்குத் தேவைப்படும் உணவுப் பொருட்கள்.

*277.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அரசினர் மாணவ, மாணவியர் விடுதிகளுக்குத் தேவையான அரிசி, மளிகைச் சாமான்களை திருச்சி சூப்பர் மார்க்கெட்டில்தான் வாங்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அவை முன் ஒரு அறிக்கை + வைக்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்பொழுது சூப்பர் மார்க்கெட்டிலே விற்கப்படுகிற பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறது. வெளியிலே மார்க்கெட்டிலே விலை குறைந்திருக்கிறது. சூப்பர் மார்க்கெட்டிலேதான் வாங்க வேண்டுமென்று சொல்வதற்கு ஏதாவது தனிக் காரணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பொதுவாகக் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து இந்தப் பொருள்கள் வாங்க வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சிறப்பு அங்காடியில் விலை கூடுதலாக இருந்தாலும் நல்ல பொருள்கள் கிடைக்கின்றன. அவர்கள் ஒரு முறையிலேயே எல்லாப் பொருட்களையும் வண்டியிலே கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போகிறார்கள். சில பொருட்களின் விலை அதிகமாக இருக்கலாம். சில பொருட்களின் விலை மலிவாக இருக்கின்றன. மொத்தத்தில் அரசுக்கு இலாபம் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : எல்லா மாவட்டங்களுக்கும் இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் எல்லா மாவட்டங்களுக்கும் அப்படிப்பட்ட உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்லா மாவட்டங்களுக்கும் தான். ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்கள் இருக்கலாம். அவை இல்லாத இடங்களாக இருந்தால் வேறு இடங்களிலே அவர்கள் வாங்கிக் கொள்ளலாம். கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தால், கூட்டுறவுச் சங்கங்களிலும், சிறப்பு அங்காடிகள் இருந்தால் சிறப்பு அங்காடிகளிலும் வாங்க வேண்டுமென்று உத்திரவு இருக்கிறது.

*96-97-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.